30th March 1966]

திரு. இராம. அரங்கண்ணல் : இதுபோல் ஹரிஜன ஹாஸ்டல்கள், வேறு இடங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற நண்பகல் உணவு ஆகியவைகளில் தொடர்ந்து நச்சுப் பொருள்கள் கலப்பதும், மாணவர்கள் ஏதாவது வியாதிகளுக்கு உள்ளாவதும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. உயிரோடு விளையாடுகின்ற இந்த விஷயத்தில் ஒரு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்த முன்ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா விடுதிகளிலும் மாணவர்களுக்கு முறையாக உணவு போடவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம். விஷம் ஏதும் விழுந்துவிடாமல் இருப்பதற்காக மூடிவைக்கவேண்டும், எந்த விதமான ஆபத்தும் ஏற்படவிடக்கூடாது என்பதைப்பற்றி அரசாங்கத்தின் மூலமாக முன்னெச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scarcity of fertilisers in Madurai district

* 511 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the scarcity of nitrogenous fertilisers in Madurai district and the consequent hardship to ryots thereat; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) மத்திய ரசாயன உரத்தொகுப்பு ஏற்பாட்டின் கீழ் இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட ரசாயன உர அளவையொட்டி இம்மாவட்டத்தின் தேவைக்கு எந்த அதிக அளவுக்கு உரம் வழங்க முடியுமோ அந்த அளவு உரம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன் : இந்த மாதிரி கடந்த காலத்தில், சமீபத்திலே ஏற்பட்டபொழுது உரம் இடவேண்டிய காலத்திலே வரவில்லை, மிகவும் தாமதமாக வந்தது, வந்தபிறகுகூட போதுமான அளவு விவசாயிகளுக்கு எல்லாம் கிடைக்கவில்லை என்பது சர்க்காரின் கவனத்திற்கு வந்ததா ? அப்படியானல், போதுமான அளவு கொடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில் கூடுதலாகத்தான் கொடுத்திருக்கிருர்கள். இதர ஜில்லாக்களில் மிச்சப்பட்டதைக்கூட வாங்கிக்கொடுத்திருக்கிருர்கள். நம்முடைய மாகாணத்திற்கு வருகிற கோட்டா வரவில்லை. இருந்தாலும் மதுரை ஜில்லாவிற்கும் கவனம் செலுத்தப்பட்டு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. கரு. சீமைச்சாமி : உரப் பற்றுக்குறை எல்லா மாவட்டங் களிலும் இருக்கிறது. எந்தக் காலத்திலே உரம் வேண்டுமோ அப்பொழுது கொடுக்கப் படுவதில்லை. முதலமைச்சர் அவர்க ளிடம் அமெரிக்காவிலிருந்து வருகின்ற உரத்திற்கு அடையாள மாகக் கொடுத்தார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே இதை யெல்லாம் ஆரம்பத்திலேயே இங்கு வரவழைத்து விவசாயி களுக்கு வசதியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு கள் செய்யும்?

கனம் திரு. பூ. கக்கன் : கொடுப்பதையெல்லாம் ஆரம்பத் திலேயே கொடுத்துவிடமாட்டார்கள். மத்திய அரசாங்கத்தின் மூலமாக இந்த மாநிலத்திற்கு எவ்வளவு தூரம் கொடுத்து உதவ முடியுமோ அவ்வளவு தூரம் கொடுக்க முன் வந்துகொண்டிருக் கிறார்கள். நான் பட்ஜெட் விவாதத்தின்போதுகூட சொன்னபடி காலப்போக்கிலே அதிகப்படியாக வரும். காலப்போக்கிலே இதுபோன்று இருக்காது என்று நினைக்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Though it is a fact that manure will be supplied throughout the year, at least connot the Government take the responsibiliy of storing these fertilisers and releasing them at the time of transplantation, i.e., in June July and August for Samba and November, December and January for Navarai ? The present release of fertilisers is such that actually in the season the ryot is not benefited. Will the Government consider this?

THE HON. SRI P. KAKKAN : The Government are taking the responsibility through the co-operative society. Whenever fertilisers are available, they are given to the farmers

Cattle Development Scheme

* 512 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to Question No. 272 on 4th November 1965, when the Intensive Cattle Development Scheme will be extended to other districts in the State?

கனம் திரு. பூ. கக்கன் : மும்முர கால்நடை வளர்ச்சித் திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கு விரிவுப்படுத்த அரசாங்கத திடம் இப்போது செயற் குறிப்பு ஏதும் இல்லை.

Agricultural Seminars

* 513 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to organise Agricultural Production Seminars, in the State ; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் கருத்தரங்குகளை நடத்துவது பற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.